முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை 2025

சைவநெறி Saivanery	தரம் 11	T	12	மூன்று மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

பகுதி – I

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "உம்பர் தரு தேனுமணி கசிவாகி..." எனும் பாடலில் போற்றப்படும் தெய்வம்
1. சிவபெருமான் 2. மகாவிஷ்ணு 3. பிள்ளையார் 4. முருகன்

02. தீய எண்ணங்களை உடையவர்கள் செய்யும் பூசையைப் பார்த்து இறைவன் வெட்கத்தோடு சிரிப்பான் எனக் கூறியவர்
1. திருஞான சம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

03. அஷ்ட புஷ்பங்களுள் அடங்காதது
1. கொல்லாமை 2. ஐம்பூதம் 3. பொறுமை 4. இரக்கம்

04. வியாக்கிரமபாத முனிவரின் மகன்
1. உபமன்யு 2. ஆதிசேஷன் 3. பிரகலாதன் 4. இரன்யு

05. பரம்பொருளைக் குறிப்பதற்கு தமிழிலே வழங்கும் சொல்
1. பதி 2. ஆண்டவன் 3. தெய்வம் 4. கடவுள்

06. வறுமையால் வாடும் தனிமனிதனுக்கு உணவு முதலானவற்றைக் கொடுத்து உதவுவது
1. ஒப்புரவு 2. ஈகை 3. தருமம் 4. அறம்

07. "சத்தியமேவ ஜயதே" எனக் குறிப்பிடும் நூல்
1. உபநிடதம் 2. பகவத்கீதை 3. வேதம் 4. புராணம்

08. ஒரு திதியின் அரைப்பங்கு குறிப்பது
1. திதி 2. கரணம் 3. யோகம் 4. இராசி

09. மருணீக்கியாருக்கு சூலை நோய் ஏற்பட்ட போது அவர் இருந்த சமணப்பள்ளி
1. பாடலிபுரம் 2. திருவாரூர் 3. தஞ்சை 4. திருவதிகை

10. 'சுவாமி நான் இறக்கும் இத்தினத்திலே உன்னை அர்ச்சித்து வழிபடுவோருக்கு அருள் புரிய வேண்டும்' என வேண்டியவர்
1. விஷ்ணு 2. தேவர்கள் 3. சூரபத்மன் 4. நரகாசுரன்

11. பெற்றோர் தமது மகளை மணமகனிடம் ஒப்படைக்கும் சடங்கு
1. காப்புக் கட்டுதல் 2. மங்கலநாண் பூட்டல்
3. கன்னிகாதானம் 4. அருந்ததி பார்த்தல்

12. வேத ஆகம உண்மைகளை எளிய முறையில் சாதாரண மக்களும் விளங்க தக்க வகையில் கூறுவன
1. இதிகாசங்கள் 2. புராணங்கள் 3. ஸ்கந்த புராணம் 4. திருமந்திரம்

13. "வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" எனக் குறிப்பிட்டவர்
1. நாவலர் 2. மாணிக்கவாசகர் 3. பாரதியார் 4. திருமூலர்

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

14. மேலான செல்வத்தை தருவதால் திருநீற்றுக்கு வழங்கும் பெயர்
1. விபூதி 2. பசிதம் 3. இரட்சை 4. பஸ்மம்
15. சிவபிரானின் ஊர்த்துவ முகமாக அமைவது
1. சத்தியோஜாதம் 2. வாமதேவம் 3. ஈசானம் 4. அகோரம்
16. "பச்சை மாமலை போல் மேனி..." எனும் திருமாலைப் பிரபந்தத்தைப் பாடியவர்
1. நம்மாழ்வார் 2. தொண்டரடிப் பொடியாழ்வார் 3. ஆண்டாள் 4. பேயாழ்வார்
17. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என கூறும் நூல்
1. திருமந்திரம் 2. மணிமேகலை 3. சீவகசிந்தாமணி 4. வேதம்
18. திருநீலகண்டபெரும்பாணரின் மனைவியின் பெயர்
1. பூவையார் 2. அருட்சோதியம்மையார் 3. சங்கிலியார் 4. மதங்கசூளாமணி
19. சுபமூர்த்த நிர்ணயம் இல்லாது செய்யப்படும் பிரதிஷ்டை
1. ஆவர்த்தனம் 2. அநாவர்த்தனம் 3. அந்தரிதம் 4. புனராவர்த்தனம்
20. திருக்கைலாயமலையிலே சிவபெருமானுக்கு தொண்டு செய்து வந்தவர்
1. சுந்தரமூர்த்திநாயனார் 2. திருநாவுக்கரசர்
3. திருஞான சம்பந்தர் 4. மாணிக்கவாசகர்
21. திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்து அவ் ஆதீனத்தின் முதற்குருவாய் விளங்கியவர்
1. ஆறுமுகநாவலர் 2. விபுலானந்தர்
3. நமசிவாயதேசிகர் 4. உமாபதி சிவாச்சாரியார்
22. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான 'பூசலார் நாயனாருடன்' தொடர்புடையது
1. அரசனின் வேண்டுகோளுக்கிணங்க கோயில் கட்டியவராவார்
2. மக்களின் விருப்பத்திற்கமைய கோயில் அமைத்தவராவார்.
3. புறக் கோயிலின் அடிப்படையில் மனதில் கோயில் கட்டியவராவார்.
4. கோயில் புனரமைப்பில் தீவிரமாக ஈடுபட்டவராவர்
23. 'கோகில சந்தேஸய' எனும் சிங்கள மொழியிலான தூதுப் பிரபந்தத்தில் சிறப்பிக்கப்படும் கோயில்
1. இணுவில் கந்தசாமி கோயில் 2. நல்லூர்
3. நயினாதீவு 4. பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்
24. 'பிரபோதசைதன்யர்' துறவறத்தை மேவிய ஆண்டு
1. 1922 2. 1924 3. 1936 4. 1948
25. 'அறிவித்தாலும் அறியமாட்டாதவை' என அழைக்கப்படுவது
1. சதசித்து 2. சுத்தசித்து 3. அசித்து 4. சிதசுதசித்து
26. "ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும்...." எனக் குறிப்பிட்டவர்
1. அப்பர் 2. மாணிக்கவாசகர் 3. சுந்தரர் 4. திருவள்ளுவர்
27. திருநாவுக்கரசர் நின்ற நெறி
1. கிரியை 2. யோகம் 3. ஞானம் 4. சரியை
28. சிவராத்திரி புராணத்தை இயற்றியவர்
1. நாவலர் 2. வரதபண்டிதர் 3. விபுலானந்தர் 4. காசிபமுனிவர்
29. ஒருவருக்கு 'சிவபுத்திரன்' எனும் தகுதி நிலையை அளிக்கவல்ல தீட்சை
1. விசேடதீட்சை 2. நிர்வாணதீட்சை 3. சமயதீட்சை 4. சாதாரணதீட்சை
30. இந்து சமயத்தின் சின்னமாக போற்றப்படுவது
1. நந்தி 2. நடராஜர் 3. வேல் 4. கருடன்
31. முப் பொருட்களாக கருதப்படுவது
1. மனம், வாக்கு, காயம் 2. அறம், பொருள், இன்பம்
3. மனம், சித்தம், அகங்காரம் 4. பதி, பசு, பாசம்
32. சைவபரிபாலன சபையுடன் தொடர்புடைய தொகுதி
1. நாவலர் ஆச்சிரமம், இந்துசாதனம், புண்ணியநாச்சியாயர்மடம்
2. சமய பரீட்சைகள், சைவாசிரிய கலாசாலை, திருக்கேதீச்சரம்
3. இந்துசாதனம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சயமப்பரீட்சை
4. தொழில் பயிற்சிக்கல்லூரி, இந்துசாதனம், சைவாசிரிய கலாசாலை

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

33. ஞான வழிபாட்டின் மூலம் அடையும் முத்தி
1. பதமுத்தி 2. சிவசாயுச்சியம் 3. சுத்தாத்துவிதம் 4. வீடுபேறு

34. இலங்கையை சிவபூமி என அழைத்தவர்
1. திருவள்ளுவர் 2. திருநாவுக்கரசர் 3. திருமூலர் 4. இராவணன்

35. கிழக்கிலங்கையில் பிதிர்க் கடன் நிறைவேற்றப்படும் இடம்
1. மாமாங்கம் 2. கீரிமலை 3. முன்னேஸ்வரம் 4. காசி

36. மண்டூர் முருகன் கோயிலில் பூசை செய்பவர்
1. கப்புறாளை 2. பூசாரி 3. சிவாச்சாரியார் 4. கப்பூகனார்

37. சிவனடியார்களுக்கு உணவளிப்பது
1. அன்னதானம் 2. மாகேஸ்வரபூசை 3. பிடியரிசித்திட்டம் 4. கஞ்சி கொடுத்தல்

மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

தெய்வம்	நூல்	வழிபாடு
A கண்ணகி	D மகாபாரதம்	G ஐப்பசிப் பரணி
B திரௌபதை	E கிராமிய சடங்குப் பாடல்	H தருமர் பட்டாபிசேகம்
C சேத்திரபாலகர்	F சிலப்பதிகாரம்	I குளிர்த்திச் சடங்கு

38. பாஞ்சால மன்னன் புரிந்த யாகத்திலிருந்து தோன்றிய பெண்ணோடு தொடர்புடைய தொகுதி
1. AEH 2. AGI 3. BCI 4. BDH

39. பௌத்தர்கள் 'பத்தினி தெய்யோ' என அழைக்கும் தெய்வத்தோடு தொடர்புடைய தொகுதி
1. ADH 2. AFI 3. BEI 4. CGH

40. வைரவர் வழிபாட்டோடு தொடர்புடைய தொகுதி
1. ADE 2. BEI 3. BFI 4. CEG

(40×1=40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. மேல்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1. கடவுள் என்பதன் பொருள் யாது
2. சித்தாந்த அட்டகத்தினுள் அடங்கும் நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. பிரதிஷ்டையின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக.
4. புறத்தே அணியும் சிவசின்னங்கள் எவை
5. திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர்களைக் குறிப்பிடுக.
6. மாணிக்கவாசகர் அருளிச் செய்த பனுவல்கள் இரண்டினைத் தருக.
7. சிவாகமங்கள் கூறும் மூவகைக் கிரியைகளும் எவை
8. அபரக் கிரியைகள் இரண்டினைத் தருக.
9. இலங்கையின் ஆதிக் குடிகள் யார்
10. சுவாமி விபுலானந்தரது இசை, நாடக நூல்களைக் குறிப்பிடுக.

(10×2=20 புள்ளிகள்)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

02. மேல்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரையையும் தருக.

அ. உற்றுமை சேர்வது.....

ஆ. நாமார்க்கும் குடி .....

இ. தண்ணளி வெண்குடை.....

ஈ. உண்ணும் சோறும் .....

உ. தூக்கும் பனுவல் ..... (3 +2=5×2=10 புள்ளிகள்)

03. "இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"
- ஆறுமுகநாவலர்

1. விரதம் என்பதற்குரிய வரைவிலக்கணத்தை குறிப்பிடுக.
2. விரதத்தை அனுஷ்டிப்பதால் ஏற்படும் பயன்கள் மூன்றினைத் தருக.
3. முருக விரதங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை அனுஸ்டிக்கும் முறை பற்றி விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. "மன்னுமாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்..." திருவாசகம்

1. இந்து சமயத்தின் முதல் நூல்கள் எவை?
2. சைவம், வைணவம், சாக்த நெறிக்குரிய ஆகமங்களைக் குறிப்பிடுக.
3. ஆகமங்களில் கூறப்படும் விடயங்களை சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்..." – திருக்கூட்டச்சிறப்பு

1. பெரிய புராணம் யாருடைய வரலாற்றைக் கூறுகின்றது?
2. தேவாசிரியன் மண்டபத்தின் சிறப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. சிவனடியார்களின் சிறப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

06. "சத்தசத்தைச் சாரா அசத்தறியா தங்கணிவை
உய்த்தல் சதசத்தாம் உயிர்" - திருவருட்பயன்

1. ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் மறுபெயர்கள் இரண்டு தருக.
2. ஆன்மாக்கள் சதசத்து என அழைக்கப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.
3. மூவகை ஆன்மாக்கள் பற்றி விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

07. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. சைவ விழுமியங்களில் அன்புடைமை
2. திருக்கேதீச்சரம்
3. வைரவர் வழிபாடு
4. சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

(5+5=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library